# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்

------

## அசல் வழக்கு எண்.2/2021

**2026 ஆம்** வருடம் ஏப்ரல் மாதம் 24 ஆம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியான பி.வா.சா.3-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேவியர் | ஜாதி | : | |
| த.பெ | : | சேசுராஜ் | தொழில் | : | விவசாயம் மற்றும் டிரைவர் |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 51/2026 |
| தேதி | : | 24.04.2026 | | | |

**முதல் விசாரணை**

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.16 ஆவணத்தில் என்னுடைய கையொப்பம் முதல் சாட்சி கையெழுத்தாக உள்ளது. பி.வா.சா.ஆ.16 ஆவணத்தை திண்டுக்கல் பஸ் டாண்டு அருகில் பழனி பஸ் வெளியேரும் இடத்தில் பெரியசாமி வழக்கறிஞர் அலுவலகத்தில் நோட்டரி பப்பளிக் வழக்கறிஞர் செல்வராஜ் முன்பு நான் கையொப்பம் செய்தேன். மரியபுஷ்பம் முன்பாக நான் கையொப்பம் செய்தேன். பி.வா.சா.ஆ.16 ஆவணமான உயில் ஆவணத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.

கடந்த 15 வருடங்களுக்கு முன்பாக மரியபுஷ்பம் என்பவர் நான் வீட்டில் இருந்தபோது மதியம் 02.00 மணிக்கு வந்து அன்று மாலை 05.00 க்கு வழக்கறிஞர் அலுவலகத்தில் கையொப்பம் செய்ய வருமாறு என்னை அழைத்தார். பி.வா.சா.ஆ.16 ஆவணத்தில் என்னுடன் வழக்கறிஞர் மனைவி செல்லம்மாள் என்பவரும் கையொப்பம் செய்தார். அவர் கையொப்பம் செய்ததை மரியபுஷ்பம் பார்த்தார். வினோத் என்பவரும் பி.வா.சா.ஆ.16 ஆவணத்தில் கையொப்பம் செய்தார். அவர் கையொப்பம் செய்தும்போதும் மரியபுஷ்பம் அவரை பார்த்தார். மரியபுஷ்பம் பி.வா.சா.ஆ.16

ஆவணத்தில் 5 இடங்களில் கைரேகை வைத்தார். பி.வா.சா.ஆ.16 ஆவணத்துடன் நபர்களின் அடையாளத்திற்காக வேறு ஆவணங்கள் இணைக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. கையொப்பம் செய்து முடித்தவுடன் நாங்கள் அனைவரும் சென்றுவிட்டோம்.

**11 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எத்தனை வருடமாக நீங்கள் பஞ்சம்பட்டியில் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் 50 வருடமாக பஞ்சம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்ன படித்துள்ளீர்கள் என்றால் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். மரியபுஷ்பம் உங்களுக்கு என்ன உறவு முறை என்றால் என் தாய், தந்தை இருவருக்கும் உறவுக்காரர்கள். உயில் ஆவணம் எழுதும் போது மரியபுஷ்பத்துக்கு எத்தனை வயது இருக்கலாம் என்றால் 55 வயது இருக்கலாம். என்ன வகையான ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி கையொப்பம் போடச்சொன்னதால் நீங்கள் சாட்சி கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் யார் முன்னிலையில் சாட்சி கையொப்பம் செய்தீர்கள் என்றால் நோட்டரி பப்பளிக் முன்னிலையில் செய்தோம். நான் ஒரு கையொப்பம் செய்தேன்.

அந்த ஆவணத்தில் மொத்தம் எத்தனை நபர்கள் செய்தார்கள் என்றால் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் 3 பேர் கையொப்பம் செய்தார்கள். உயிலை எழுதி வைத்த மரியபுஷ்பம் கைரேகை வைத்துள்ளார். நீங்கள் கையொப்பம் செய்தபோது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் கையொப்பம் செய்யும்போது நோட்டரி பப்பளிக்கையும் சேர்த்து 5 நபர்கள் இருந்தோம். மரியபுஷ்பம் உயில் ஆவணத்தில் கைரேகை வைக்கும்போது யார் முன்னிலையில் வைத்தார்கள் என்றால் எங்கள் 4 பேர் முன்பாக வைத்தார். அவர் கைரேகை வைத்ததற்கு கீழ் வேறு எதுவும் எழுதினார்களா என்றால் நோட்டரி பப்பளிக் வழக்கறிஞர் அதற்கும் கீழே எழுதினார். உங்களுடைய

கையொப்பத்திற்கு கீழுள்ள முகவரியை யார் எழுதிக்கொண்டார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல நோட்டரி பப்பளிக் எழுதிக்கொண்டார்.

உங்கள் முகவரிக்கு ஆவணம் எதுவும் நீங்கள் கொடுத்தீர்களா என்றால் இல்லை. நீங்கள் எழுதியதாக சொல்லும் ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 2015 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. தேதி நியாபகமில்லை. அந்த ஆவணம் எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்றால் அந்த உயில் ஆவணம் எத்தனை ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. மரியபுஷ்பத்தின் கணவர் பெயர் என்னவென்றால் தெரியாது. மரியபுஷ்பத்தின் கணவர் இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டாரா என்றால் அப்பொழுதே இறந்துவிட்டார். பெரியவர்கள் சொல்லி நான் கேள்விபட்டிருக்கிறேன். மரியபுஷ்பத்திற்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரே ஒரு மகள் ஆலிஸ்மேரி மட்டும் உள்ளார்.

மேற்சொன்ன ஆவணத்தை பொருத்து உங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், நீங்கள் சொல்வது போல், சொன்ன இடத்தில் நீங்கள் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும், 15வது பிரதிவாதி ஆலிஸ்மேரி உங்கள் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று வழக்கறிஞர் கூறினார்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor